



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அயப்பாக்கம் ஊராட்சியில் 2026 பானைகளில் கழக மகளிர் அணியினர் ஒன்றிணைந்து கருப்பு/சிவப்பு வண்ணத்தில் சேலை அணிந்து சமத்துவப் பொங்கல் விழாவும், கழக அரசின் சாதனை திட்டங்களை வண்ண கோலமிட்டு உலக சாதனை படைத்தனர். நிகழ்ச்சி ஏற்பாட்டினை ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி செய்திருந்தார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் ஏராளமான மகளிர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தமிழர் திருநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் வடக்கு ஒன்றியமேத்தூர் ஊராட்சி பாரதி நகர் பகுதியில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் ஒன்றிய கழகச் செயலாளர் மு.முரளிதரன் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் ரமேஷ் ராஜ் கலந்துகொண்டு தொடங்கி வைத்து 500க்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் பரிசு வழங்கி உறி அடி நிகழ்வில் பங்கேற்று பானையை உடைத்தார்இதில் மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, நிர்வாகிகள் ப.து.தமிழரசன், கருணாகரன், ரவி, ஆர். ரவிச்சந்திரன், ராஜேந்திரன், ராஜா, மினா அன்பு மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள் .

# அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதி: அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கண்டனம்!



சென்னை, ஜன.18-

கடந்த ஐந்து ஆண்டுகளாக திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையே காப்பியடித்து தேர்தல் வாக்குறுதியாக வெளியிட வேண்டிய அளவுக்கு அ.தி.மு.க.வின் நிலைமை பரிதாபமாக போய்விட்டது என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

ஒவ்வொரு தேர்தலிலும் கதாநாயகனாக திகழும் திமுகவின் தேர்தல் அறிக்கை வெளியாவதற்கு முன்பே அறிவாலயம் வாசலில் குத்த வைத்து காத்திருக்கும் அதிமுகவினர், திமுகவின் தேர்தல் அறிக்கை வெளியானதும் முதல் காப்பியை வாங்கிக்கொண்டு, அதை அப்படியே காப்பியடித்து அதிமுகவின் தேர்தல் அறிக்கையாக வெளியிடுவது தான் வழக்கமான நடைமுறை. இந்த முறை, அதில் விசித்திர மாற்றத்தை செய்து தேர்தல் அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்கு “டூப்” போட்டு அறிக்கை வெளியிட வேண்டிய அளவுக்கு அதிமுகவின் நிலைமை பரிதாபமாக போய்விட்டது !

2021ல் திமுகவின் தேர்தல் அறிக்கை வெளியான போது, தமிழ்நாட்டின் நிதி நிலைமை சரியில்லை எனவே இதையெல்லாம் நிறைவேற்றவே முடியாது என்றார் பழனிசாமி. ஆனால், தமிழ்நாட்டை அனைத்து தளங்களிலும் முன்னேற்றியதுடன், எதையெல்லாம் திமுகவால் செய்ய முடியாது என்று எதிர்கட்சி தலைவர் சொன்னாரோ, அதை எல்லாம் நம் திராவிட நாயகன் முதலமைச்சர் வெற்றிகரமாக செயல்படுத்தி காட்டிவிட்டார்.

இப்போது புதிதாக எதுவும் சிந்திக்க திராணி இல்லாமல் திமுக அரசின் பழைய திட்டங்கள் மீது ஸ்டிக்கர் ஒட்டும் அறிவிப்புகளை வெளியிடுகிறது அதிமுக.

அவர்கள் கட்சியின் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில், அதில் உள்ளவர்களின் திறமை மீது நம்பிக்கை இல்லாமல், திமுக அரசின் சாதனை திட்டங்களை ரோல் மாடலாகக் கொண்டு, அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

இது உங்களுக்கு செட் ஆகல சார். வெயிட் பண்ணுங்க. உங்க மூளையை இப்ப கசக்க வேண்டாம். எப்போதும் போல இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைக்கும் #திமுக_தேர்தல்_அறிக்கை வந்த பிறகு, அதை முழுமையாக உங்க பழைய ஜெராக்ஸ் மிஷினில் காப்பி எடுக்கலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# பாரிவாக்கம் - காட்டுப்பாக்கத்தில் கபடி போட்டி - திராவிட பொங்கல் நிகழ்ச்சி!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பரிசுகள் வழங்கினார் ! ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில்

திருவள்ளூர், ஜன. 18-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தமிழர் திருநாளை முன்னிட்டு கபடி போட்டி மற்றும் பல்வேறு விளையாட்டுப் போட்டி திராவிட பொங்கல் நிகழ்ச்சி பாரிவாக்கம், மற்றும் காட்டுப்பாக்கம் ஆகிய ஊராட்சியில் நடைபெற்றது இதில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமை தாங்கினார்

மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.முத்தமிழ் செல்வன் ,வி.குமார், ஒன்றிய கழக நிர்வாகிகள் டி . அண்ணாமலை , ஏ.ஜனார்த்தன், சு.சுமதி குமார், ஏ.ஆர்.பாஸ்கர், ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். புகழேந்தி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க.பரிமேலழகன், கே.விக்னேஷ் நிர்வாகிகள் கே.ஜி.ஆர். ஸ்டாலின் , வழக்கறிஞர் அருண் தகவல் தொழில்நுட்ப அணி ஸ்ரீதர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்துகொண்டு பாரிவாக்கத்தில் நடைபெற்ற கபடி போட்டி தொடங்கி வைத்து முதல் பரிசு வென்ற அணிக்கு 25 ஆயிரம் ரூபாய் மற்றும் கோப்பை இரண்டாவது இடம் பெற்ற அணிக்கு 20 ஆயிரம் ரூபாய் மற்றும் கோப்பை மூன்றாவது இடம் பெற்ற அணிக்கு 15 ஆயிரம் ரூபாய், நான்காவது அணிக்கு வெற்றி பெற்ற பத்தாயிரம் ரூபாய் மற்றும் கலந்து கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசு கோப்பைகள் வழங்கினார் இதனை தொடர்ந்து காட்டுப்பாக்கத்தில் நடைபெற்ற உரியடித்தல், கோலப்போட்டி, மியூசிக்கல் சேர், நாட்டியம், நாடகம், பேச்சுப்போட்டி, பாடல் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளை பார்வையிட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், பொதுமக்கள் ஆயிரம் பேருக்கு படவை, கரும்பு உள்ளிட்ட பொங்கல் தொகுப்புகளையும் வழங்கி வாழ்த்தி பேசினர்.

இதில் வாழை மரங்கள், கரும்பு, மாவிலைத் தோரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. பாரம்பரிய முறைப்படி ஏராளமான பெண்கள் பொங்கல் வைத்து இயற்கைக்கும் சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக வழிபாடு நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மாநில ஆதிதிராவிடர் நலக் குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பின கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு , பொதுக்குழு உறுப்பினர் திருவேற்காடு எஸ்.சங்கர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் விவசாய அணி டி.குமரேசன், வி. தணிகாசலம், ஏ.வி.ரவி, என்.சண்முகம், பூவை எம். ராம்பாபு, திருமலைராஜ், திருலோகசுந்தர், கேசவன் அன்னம், அருள் நாயகி, விஜயலட்சுமி, செல்வி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் .





சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, அறிவுறுத்தின்படி ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40 வது வட்டத்தில் வட்ட செயலாளர் நா. கோதண்டன் தலைமையில் கோலப்போட்டியில் வெற்றி பெற்ற அம்மணி அம்மாள் தோட்டம் பொது மக்களுக்கு ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பரிசு வழங்கினார். உடன் பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் என்.அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பாலு, ஆர். சீமான், எம்.எஸ்.ரவி, மு.சா. அரிகுமார், என்.டேனியல், மா.பாஸ்கரன், ஜி.ராஜ்குமார், ஆர்.கிருஷ்ணன், டி.கணேசன், எஸ்.கலைச்செல்வி, கோ.தமிழ்செல்வன், க.நரேஷ்குமார், கே.பிரேம்குமார், மணி , ஏ.வசந்தி, மற்றும் கழகத் தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் வட்ட கழக செயலாளர் எம் எம் ஜெயரத்தினம் அவர்களின் தலைமையில் திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு ஒரு நாள் கிரிக்கெட் போட்டி முகப்பேர் அம்பேத்கர் விளையாட்டு திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் காரம் பாக்கம் க.கணபதி, மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் அ.ம.துரைவீரமணி, ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் வட்ட செயலாளர் எம்.கே.பி.அண்ணாதாசன், மாமன்ற உறுப்பினர்கள் கே.வி.திலகர், ஆ.மாலினி, பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ் மாவட்ட பிரதிநிதி எம்.சி.எழில்அரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

## கோவை தெற்கு மாவட்டம்

# கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட குறிச்சி வடக்கு, குறிச்சி தெற்கு, குறிச்சி மேற்கு ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வட்டங்கள் அதற்குட்பட்ட வாக்குச்சாவடிகள் விவரம் மற்றும் வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் **கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிகளுக்**குட்பட்ட;

**குறிச்சி வடக்கு, குறிச்சி தெற்கு, குறிச்சி மேற்கு ஆகிய பகுகளில் அடங்கியுள்ள வட்டங்கள்** பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட வட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாக்குச்சாவடிகள் கொண்டதாக அமைவதோடு, பிரிக்கப்பட்ட வட்டங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பின்வருமாறு வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**கிணத்துக்கடவு தொகுதி**

**குறிச்சி வடக்கு பகுதி**

**வட்டங்கள் :** 95, 95அ, 95ஆ, 99, 99அ ஆகிய 5 வட்டங்கள்.

**வட்டம், அதற்குட்பட்ட வாக்குச் சாவடிகள் மற்றும் வட்டப் பொறுப்பாளர்கள்**

**95–வது வட்டம் :** 136, 137, 138, 139, 140, 143 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்

**95வது வட்டப் பொறுப்பாளர் : முத்தலி,** 407/2, வசந்தம் நகர், 4வது வீதி, போத்தனூர்,கோவை.

**95அ–வது வட்டம் :** 141, 142, 144, 145, 146, 152 ஆகிய 6 வாக்குச் சாவடிகள் .

**95அ–வது வட்டப் பொறுப்பாளர் : அசாருதீன்,** 1/29, பி.கே.எம். காலனி, 3வது வீதி, ஆத்துப்பாலம், கோவை.

**95ஆ–வது வட்டம் :** 147, 149, 150, 151, 153, 162 ஆகிய 6 வாக்குச் சாவடிகள் .

**95ஆ–வது வட்டப் பொறுப்பாளர் : கே. பழனிச்சாமி,** 15, பாரதி நகர், மைல்கல், போத்தனூர் - 641023, கோவை.

**99–வது வட்டம் :** 179, 180, 181, 182, 183, 184, 185, 186, 187 ஆகிய 9 வாக்குச் சாவடிகள் .

**99–வது வட்டப் பொறுப்பாளர் : முரளி,** போத்தனூர், கோவை.

**99அ–வது வட்டம் :** 172, 173, 174, 175, 176, 177, 178 ஆகிய 7 வாக்குச் சாவடிகள் .

**99அ–வது வட்டப் பொறுப்பாளர் :** அ. சாணவாஸ், 41, அமீர் சாயபு வீதி, நூராபாத், போத்தனூர் - 641023, கோவை.

**குறிச்சி தெற்கு பகுதி**

**வட்டங்கள் :** 97, 97அ, 97ஆ, 98, 98அ, 100, 100அ, ஆகிய 7 வட்டங்கள்.

**வட்டம், அதற்குட்பட்ட வாக்குச் சாவடிகள் மற்றும் வட்டப் பொறுப்பாளர்கள்**

**97–வது வட்டம் :** 79, 80, 81, 83, 94, 95, 96, 100 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**97வது வட்டப் பொறுப்பாளர் : க. மகாலிங்கம்,** 16/65, பாடசாலை வீதி, ஈச்சனாரி, கோவை - 24.

**97அ–வது வட்டம் :** 85, 86, 87, 88, 93, 97, 102, 111 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**97அ–வது வட்டப் பொறுப்பாளர் : எம். பீர் மௌலானா,** 4, நேதாஜி நகர், மதுக்கரை ரோடு, சிட்கோ - 641021, கோவை.

**97ஆ–வது வட்டம் :** 104, 105, 106, 107, 108, 109, 110 ஆகிய 7 வாக்குச் சாவடிகள்

**97ஆ–வது வட்டப் பொறுப்பாளர் : எஸ். ராஜ்,** 14ஏ, கே.வி.கே. நகர்,மதுக்கரை மெயின் ரோடு, சிட்கோ - 641021, கோவை.

**98–வது வட்டம் :** 124, 132, 133, 161, 164, 171 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்

**98வது வட்டப் பொறுப்பாளர் : நா. குமரேசன்,** 18, பாரத் நகர், போத்தனூர், கோவை - 23.

**98அ–வது வட்டம் :** 122, 123, 159, 160, 166, 170 ஆகிய 6 வாக்குச் சாவடிகள்

**98அ–வது வட்டப் பொறுப்பாளர் : ஆர். கண்ணன்**, 63எச், சிவசக்தி கார்டன், சிட்கோ - 641021, கோவை.

**100–வது வட்டம் :** 191, 192, 195, 198, 199, 200, 201 ஆகிய 7 வாக்குச் சாவடிகள்

**100வது வட்டப் பொறுப்பாளர் : ம. மாணிக்கம் (எ) உமாசங்கர்,** 14/2, நாச்சிமுத்துக்கவுண்டர் வீதி, மேட்டூர், போத்தனூர், கோவை.

**100அ–வது வட்டம் :** 76, 77, 78, 82, 193, 194, 196, 197 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**100அ–வது வட்டப் பொறுப்பாளர் : இரா. கனகராஜ்,** 28ஏ1, ராஜராஜேஸ்வரி நகர், போத்தனூர் - 641023, கோவை.

**குறிச்சி மேற்கு பகுதி**

**வட்டங்கள் :** 85, 85அ, 94, 94அ, 96, 96அ ஆகிய 6 வட்டங்கள்.

**வட்டம், அதற்குட்பட்ட வாக்குச் சாவடிகள் மற்றும் வட்டப் பொறுப்பாளர்கள்**

**85–வது வட்டம் :** 128, 129, 130, 148,154 ஆகிய 5 வாக்குச் சாவடிகள்

**85வது வட்டப் பொறுப்பாளர் : சக்திதேவி,** 93, காந்திஜி ரோடு, குறிச்சி, கோவை.

**85அ–வது வட்டம் :** 131, 155, 188, 189, 190 ஆகிய 5 வாக்குச் சாவடிகள்

**85அ–வது வட்டப் பொறுப்பாளர் : ஆர். செல்வக்குமார்,** 26, வெங்கடாசலபதி நகர், குறிச்சி, சுந்திராபுரம், கோவை - 641024

**94–வது வட்டம் :** 89, 90, 91, 92, 98, 99, 101, 103, 112 ஆகிய 9 வாக்குச் சாவடிகள்

**94–வது வட்டப் பொறுப்பாளர் : கே. அசோக்குமார்,** 4, ஹர்ஷா கார்டன், மாச்சம்பாளையம், சுந்திராபுரம், கோவை.

**94அ–வது வட்டம் :** 113, 114, 115, 116, 117, 118, 134, 135 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**94அ–வது வட்டப் பொறுப்பாளர் : சிவராமன் (எ) ஆர். மயில்சாமி,** 2/3சி, மாரியம்மன் கோவில் வீதி, மாச்சம்பாளையம் - 641024, கோவை.

**96–வது வட்டம் :** 156, 157, 158, 163, 165, 167, 168, 169 ஆகிய 8 வாக்குச் சாவடிகள்

**85அ–வது வட்டப் பொறுப்பாளர் : சபரி பாலு (எ) ராஜேந்திரன்**, 1/20, முதலியார் வீதி, சுந்திராபுரம், கோவை.

**96அ–வது வட்டம் :** 84, 119, 120, 121, 125, 126, 127 ஆகிய 7 வாக்குச் சாவடிகள்

**96அ–வது வட்டப் பொறுப்பாளர் : பா. ராஜா,** 164ஏ, 268, சாரதா மில் ரோடு, சுந்திராபுரம் - 641024, கோவை.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.01.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.





சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 123 வது வட்ட கழகம் சார்பில் தைத்திருநாளாம் தமிழர் திருநாள் முன்னிட்டு கழகத் தலைவர் ஆணைக்கிணங்க திராவிட பொங்கலிட்டு மகளிர் காண மாபெரும் கோலம் போட்டி வட்ட செயலாளர் மு. இ.ஏழுமலை தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி .மதி. எம்.சி. ஆகியோர் போட்டியில் வெற்றி பெற்ற தாய்மார்களுக்கு பொங்கல் பரிசு வாங்கினார்கள். விழாவில் மாநில மாவட்ட பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி தி.மு.க சார்பில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ச.சங்கர் கணேஸ் எம்.சி., ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் சதுரங்கப் போட்டியின் பரிசளிப்பு மற்றும் சமத்துவ பொங்கல் விழாவில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, தேர்தல் பார்வையாளர் பி.டி.பாண்டிசெல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ். அருணாசலம் ஆகியோர் போட்டிகளை துவக்கி வைத்து பரிசுகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினர். இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.